பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

18 08 2024 **SUNDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கினை உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

- தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்னும் சற்றுநேரத்தில் சென்னையில் வெளியிடுகிறார்.

- விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

- குவைத்துடனான நல்லுறவு வலுவடைந்து வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

- Winston Salem Open டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar சுரேஷ் இரண்டாவது தகுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

---- *இனி விரிவான செய்திகள்* ---

<<<<<<<>>>>>

மேற்குவங்க மாநிலம் கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கினை உச்சநீதிமன்றம் தாமாகவே முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

தலைமை நீதிபதி திரு சந்திரசூட் தலைமையிலான மூன்று பேர் கொண்ட அமர்வு இதுதொடர்பாக நாளை மறுநாள் விசாரணை நடத்த உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதற்கிடையே, இந்த சம்பவத்தில் இதுவரை ஒருவர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளதாகவும், பலருக்கு தொடர்பு இருக்கக்கூடும் என்றும் உயிரிழந்த பெண் மருத்துவரின் தாயார் கூறியுள்ளார்.

குற்றவாளி சட்டத்தின்முன் நிறுத்தப்படுவார் என்று மேற்கு வங்க முதலமைச்சர் செல்வி மம்தா பானர்ஜி உறுதியளித்ததை சுட்டிக்காட்டிய அவர், இருப்பினும் இதில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றார்.

இந்நிலையில், மேற்குவங்கத்தில் ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் அரசு, பெண்கள், இளையோர் மற்றும் ஜனநாயகத்திற்கு எதிராக செயல்படுவதாக பிஜேபி தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஜெ பி நட்டா குற்றம் சாட்டியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், மக்கள் நலனில் அக்கறையின்றி திரிணாமுல் காங்கிரஸ் அரசு செயல்படுவதாகவும் குறை கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், இந்த திட்டத்தின்கீழ் வழங்கப்படும் நிதியுதவி விவசாயிகளின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படுவதை சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம், எவ்வித இடைத்தரகர்கள் குறுக்கீடும் இன்றி இந்த திட்டத்தின் பலன்களை விவசாயிகள் பெற்று வருவதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<<>>>>>

தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்னும் சற்றுநேரத்தில் வெளியிடுகிறார்.

சென்னையில் தற்போது நடைபெற்றுவரும் இதற்கான விழாவில், முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன், பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலை உள்ளிட்டோர் பங்கேற்றுள்ளனர்.

முன்னதாக, திரு ராஜ்நாத் சிங், கருணாநிதியின் நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

அங்குள்ள கருணாநிதியின் அருங்காட்சியகத்தையும் திரு ராஜ்நாத் சிங் பார்வையிட்டார்.

<<<<<<<>>>>>

உடல் உறுப்புதானம் குறித்து கூடுதல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் வலியுறுத்தியுள்ளார்.

ஜெய்பூரில், உடல் உறுப்பு தானம் தொடர்பான நிகழ்ச்சியில் கலந்துகொண்டு அவர் பேசினார்.

உடல் உறுப்பு தானம் செய்வது உன்னத செயல் என்றும் அவர் கூறினார்.

இதனை கருத்தில்கொண்டு, உடல் உறுப்பு தானம் செய்ய முன்வர வேண்டும் என்றும் திரு ஜெக்தீப் தங்கர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<<>>>>>

குவைத்துடனான நல்லுறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

அரசுமுறைப்பயணமாக குவைத் சென்றுள்ள அவர், அந்நாட்டு இளவரசர் திரு Sheikh Sabah Al Khaled Al Sabah-வை சந்தித்து பேச்சு நடத்தியபின்னர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கு இடையேயான உறவை அடுத்தக்கட்டத்திறகு எடுத்துச்செல்வது குறித்து இந்த சந்திப்பின்போது விரிவாக விவாதிக்கப்பட்டுள்ளதாகவும் திரு ஜெய்சங்கர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>

நேபாளத்தின் வெளியுறவு அமைச்சர் டாக்டர் Arzu Rana Deuba ஐந்து நாள் அரசு முறைப்பயணமாக புதுதில்லி வந்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கரை அவர் நாளை சந்தித்து பேசவுள்ளார்.

இருநாடுகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இருவரும் விவாதிக்க உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

குரங்கு அம்மை பாதிப்பை தடுப்பது தொடர்பான உயர்நிலை ஆய்வுக்கூட்டம் பிரதமரின் முதன்மை ஆலோசகர் டாக்டர் பி கே மிஸ்ரா தலைமையில் இன்று புதுதில்லியில் நடைபெற்றது.

சுகாதாரம், உள்துறை, பேரிடர் மேலாண்மை உள்ளிட்ட துறைகளின் செயலர்களும், மூத்த அதிகாரிகளும் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.

<<<<<<<>>>>>

உத்தரப்பிரதேசத்தில் நேரிட்ட சாலை விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 37 பேர் காயமடைந்தனர்.

Bulandshahr மாவட்டத்துக்கு உட்பட்ட Salempur பகுதியில் பேருந்தும், வேனும் மோதிக்கொண்டதில் இந்த விபத்து நேரிட்டதாக அம்மாநில காவல்துறையினர் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மீரட் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

மலேசிய பிரதமர் திரு Dato Seri Anwar Bin Ibraham மூன்று நாள் அரசு முறைப்பயணமாக நாளை புதுதில்லி வருகிறார்.

பிரதமர் திரு நரேந்திர மோடியின் அழைப்பை ஏற்று அவர் இந்த பயணத்தை மேற்கொள்ள உள்ளதாக வெளியுறவு அமைச்சகத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

பிரதமர் திரு நரேந்திர மோடியுடன், மலேசிய பிரதமர் நாளை மறுநாள் பேச்சு நடத்தவுள்ளார்.

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் ஆகியோரையும் மலேசிய பிரதமர் சந்தித்து பேசவுள்ளார்.

பிரதமராக திரு Anwar Bin Ibraham பொறுப்பேற்ற பின்னர் இந்தியா வருவது இதுவே முதல் முறையாகும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

மத்திய அமைச்சர் திரு Jual Oram-மின் மனைவி Jhingia டெங்கு பாதிப்பு காரணமாக இன்று புவனேஷ்வரில் காலமானார்.

டெங்கு காய்ச்சல் பாதிப்பு காரணமாக தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததார்.

திரு Jual Oram-மும் டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டருப்பதாகவும், அவர் சிகிச்சைக்காக தில்லி எயிம்ஸ் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட உள்ளதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

விண்வெளித்துறையில் இளைய தலைமுறையினரும், புத்தொழில் நிறுவனங்களும் அதிக ஆர்வம் செலுத்தி வருவதாக இஸ்ரோவின் முன்னாள் இயக்குனர் திரு மயில்சாமி அண்ணாதுரை கூறியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் அருகே கல்லூரி பட்டமளிப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - மயில்சாமி அண்ணாதுரை – 45 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>

யுக்ரைனில் உள்ள அணுமின் உற்பத்தி நிலையத்தின் பாதுகாப்பு சூழ்நிலை மோசமடைந்துள்ளதாக சர்வதேச அணுசக்தி முகமை எச்சரித்துள்ளது.

இந்த அணுமின் உற்பத்தி நிலையத்தின் மீது ட்ரோன் தாக்குதல் நடத்தப்பட்டதையடுத்து, அதன் பாதுகாப்பு அம்சங்கள் சேதமடைந்துள்ளதாக அணுசக்தி நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

<<<<<<<>>>>>

சீனாவில் நிலக்கரி சுரங்கத்தில் ஏற்பட்ட விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர். 3 பேரை தேடும் பணி நடைபெற்றுவருகிறது.

Weixin மாகாணத்துக்கு உட்பட்ட பகுதியில் உள்ள நிலக்கரி சுரங்கத்தில் இந்த விபத்து நேரிட்டதாக அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

நிலக்கரி மற்றும் வாயு கசிவால் ஏற்பட்ட வெடி விபத்து காரணமாக உயிரிழப்பு ஏற்பட்டதாக முதல்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதுதொடர்பாக, உரிய விசாரணை நடைபெற்று வருவதாகவும் அந்நாட்டு அரசு கூறியுள்ளது.

<<<<<<<>>>>>

*விளையாட்டு செய்திகள்*

Winston Salem Open டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar சுரேஷ் இரண்டாவது தகுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

முதலாவது தகுதி சுற்று ஆட்டத்தில் அவர், 7-6, 6-2 என்ற செட் கணக்கில் ரஷ்யாவின் Alexey Zakharov-வை வென்றார்.

------------

அபுதாபி சர்வதேச செஸ் போட்டியில், இந்தியாவின் Pranesh மூன்றாவது இடத்தை பிடித்தார்.

---------------

ஆஸ்திரேலியா "ஏ" அணிக்கு எதிரான மூன்றாவது மற்றும் இறுதி ஒருநாள் மகளிர் கிரிக்கெட் போட்டியில் இந்தியா "ஏ" அணி 171 ரன் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

Mackay –யில் நடைபெற்ற இப்போட்டியில், டாஸ் வென்ற ஆஸ்திரேலியா முதலில் பந்துவீச தீர்மானித்தது.

இதனையடுத்து பேட் செய்த இந்தியா நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 243 ரன் எடுத்தது.

அதிகபட்சமாக Raghvi Bist 53 ரன் எடுத்தார்.

244 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்கோடு பின்னர் பேட் செய்த ஆஸ்திரேலியா தொடக்கம் முதலே விக்கெட்டுகளை இழக்கத்தொடங்கி, 22 புள்ளி ஒரு ஓவரில் 72 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

அதிகபட்சமாக Maddy Darke 22 ரன் எடுத்தார்.

எஞ்சியவர்கள் சொற்ப ரன்னுக்கு விக்கெட்டுகளை பறிகொடுத்தனர்.

Priya Mishra அபாரமாக பந்துவீசி 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

மூன்று போட்டிகள் கொண்ட இந்த தொடரை ஆஸ்திரேலியா "ஏ" அணி 2-1 என்ற ஆட்டக்கணக்கில் வென்றுள்ளது.

<<<<<<<>>>>>

<u>மீண்டும் தலைப்புச் செய்திகள்</u>

- கொல்கத்தாவில் பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்ட வழக்கினை உச்சநீதிமன்றம் தாமாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டுள்ளது.

- தமிழக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நூற்றாண்டு நினைவு நாணயத்தை பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் சற்றுமுன் சென்னையில் வெளியிட்டார்.

- விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத்திட்டம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

- குவைத்துடனான நல்லுறவு வலுவடைந்து வருவதாக வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கர் கூறியுள்ளார்.

- Winston Salem Open டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Dhakshineswar சுரேஷ் இரண்டாவது தகுதி சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

<<<<<<<END>>>>>